குமரியின் சிறப்பு என்று முன்னோர்களால் கருதப்பட்ட ஏ.வி.எம். கால்வாயின் கழிவுகளை அகற்ற வேண்டும். அதனை மீண்டும் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும். அதில் படகுப் போக்குவரத்து ஏற்படுத்தவும், கடலிலிருந்து உப்பு நீர் உட்புகாமல் இருக்கவும், சுனாமி போன்ற நேரங்களில் அதில் உள்ள கழிவுகள், போன முறை நிகழ்ந்தது போல் மக்களுக்கு ஆபத்தாக ஆவதைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏ.வி.எம். கால்வாய் சீரமைக்கப்பட வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாங்கோடு ஊராட்சி, சிதறால் மலைக்கோயிலைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும்.

கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நட்டாலம் ஊராட்சி, நட்டாலம் சிவன்கோவில், மறைசாட்சி தேவசகாயம் பிள்ளை பிறந்த இடங்களை ஒருங்கிணைத்து ஆன்மீக சுற்றுலாத் தலம் அமைக்கப்பட வேண்டும்.

குமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம், குழித்துறை, படந்தாலுமூடு, திருவட்டாறு ஆகிய பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் ஓட்டை, உடைசல், கைப்பிடி இல்லாத இருக்கைகள் மழை நேரங்களில் ஒழுகும் கூரையுடைய, மோசமான நிலையில் பயணம் செய்ய லாயக்கற்ற தகுதியில்லாத, பாதுகாப்பில்லாதப் பேருந்துகளை மாற்றிவிட்டு மத்திய அரசின் JNNURM திட்டத்தின்கீழ் நிதி பெற்று, புதிய பேருந்துகளைக் குமரி மாவட்டம் முழுவதும் இயக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

குமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் துறை, பள்ளம் துறை, விளவங்கோடு தாலுகா, வள்ளவிளை துறை, தூத்தூர் துறை, மார்த்தாண்டம்துறை ஆகிய கடற்கரையோரக் கிராமங்களில் மீன் இறங்கு தளங்கள், மீன் பதனிடும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வர வேண்டும்.

விளவங்கோடு தாலுகா, கடற்கரை ஓரமாக தேங்காய்பட்டணம்-இரயுமன்துறை இடையே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, கடையாலுமூடு பேரூராட்சி, திற்பரப்பு பேரூராட்சிகளை இணைக்கும்விதமாக கோதையாற்றின் குறுக்கே தெற்பக்கடவு பகுதியில் புதிய பாலம் கட்டப்பட வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, கடையாலுமூடு பேரூராட்சி, வலிய ஏலா பகுதியிலுள்ள 171 வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, கடையாலுமூடு பேரூராட்சி, வலிய ஏலா பகுதியில் குடியிருக்கும் 182 வீடுகளுக்குச் சொந்தமான 97.36 ஏக்கர் நிலத்தைக் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கிவிட்டு, அதுபோன்று இருமடங்கு பரப்பளவு உள்ள அரசு புறம்போக்கு நிலத்தை பாதுகாக்கப்பட்ட காடுகள் துறைக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனது கோரிக்கையை ஏற்று அந்தப் பேரூராட்சியும் தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்துள்ளது. அந்த நிலங்களின் வகைமாற்றத்திற்கு மத்திய அரசுக்கு தமிழக அரசு உடனே பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருவட்டாறு ஊராட்சி ஒன்றியம், பேச்சிப்பாறை ஊராட்சி, மணியன்குழி அஞ்சல், அன்பு நகர் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அரசு வழங்கிய குடியிருப்பு மனைகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை, விவேகானந்தர் நினைவு பாறைக்கிடையே புதிய உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு வட்ட வழங்கல் அலுவலகம், விளாத்துறை ஊராட்சி, காப்புக்காடு ஊரைச் சேர்ந்த ராமச்சந்திரன் ஜெபா என்ற ஏழை கூலித் தொழிலாளி வறிய நிலையில் உள்ளார். அவரது குடும்ப அட்டை எண் 30/டபிள்யு/0006838 வெள்ளை அட்டையாக (கவுரவ அட்டை) உள்ளது. இவரது ரேசன் கார்டை அரிசி கிடைக்கும் பச்சை அட்டையாக மாற்ற அரசு ஆவன செய்ய வேண்டும். இதுபோன்று குமரி மாவட்டம் மற்றும் தமிழகம் எங்கும் தகுதியான ஏழைகளுக்கும் பச்சை (அரிசி) ரேசன் அட்டை வழங்க வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டம் வழியாக குலசேகரம்-கொல்லங்கோடு பேருந்து, குளச்சல்-மார்த்தாண்டம்-குலசேகரம், நாகர்கோவில்-கொல்லங்கோடு (வழி திங்கள் நகர், கருங்கல், புதுக்கடை) நாகர்கோவில்-கடையாலுமூடு ஆகிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் மற்றும் மகளிர் சிறப்புப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.